| உத்தரவு நாள் : 17.06.2025<br>சி.எம்.பி.எண். : 380/2026 | | |
|---|---|---|
| **தடயப்பொருள் உரிமையாளர்** | : | **ஜெயந்தி க/பெ. மகேஷ்** |
| **சட்டப்பிரிவு** | : | 497 BNSSன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| **காவல்நிலையம்** | : | **கருங்கல்** காவல் நிலையம் |
| **குற்ற எண். சட்டப்பிரிவு** | : | **158/2026** BNS 2023 பிரிவு**கள் 331(3), 305(a)** |

மனு மற்றும் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் தடயப் பொருட்களாக இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 113/2026, சுமார் 26 கிராம் 470 மில்லி எடைக் கொண்ட தங்க செயின் ஒன்று** இடைக்காலமாக ஒப்படைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசுத்தரப்பு /எதிர்மனுதாரராகிய காவல் துறையினருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, பதில் பெறப்பட்டது. அவர்களது பதிலில் **தடயப் பொருளை** மனுதாரர் வசம் ஒப்படைத்தால் வழக்கு விசாரணைக்கு வரும்போது ஆஜர்படுத்தமாட்டார் என்பதாலும் **மேற்படி தடயப்பொருளை** விற்கக்கூடும் என்பதாலும் மனுதாரர் வசம் **தடயப்பொருளை** திரும்ப ஒப்படைப்பதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் அடிப்படையிலும், அவர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுதாரரின் **தடயப்பொருளை**வைத்திருந்தால் எதிர்காலத்தில் அது பயனற்ற நிலைக்கு போய்விடும் என்றும், அதன் மறு மதிப்பு குறைந்து போய்விடும் சூழ்நிலை ஏற்படும் என்பதாலும் **மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் எதிர் குஜராத் மாநிலம் (2002(10)SCC253) வழிக்காட்டுதலின்படியும் மற்றும் Criminal Rules of Practice 2019 Rule 257(1) ன் படி** தடயப்பொருளை இடைக்கா**லமாக ஒப்படைப்பதே உசிதம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது,**

**முடிவில்** வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், **தடயப்பொருளை** மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**நிபந்தனைகள்:**

1) ரூபாய். 2,00,000/–த்திற்கான சொந்த பிணை முறி எழுதிதரவேண்டும்.

2) மனுதாரர் மேற்படி தடயப்பொருளை விற்கவோ, வேறு எந்த வகையிலோ அதன் தன்மையினை, தோற்றத்தினை மாற்றம் செய்யக்கூடாது.

3) வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணையின் பேரில் அழைக்கும் போது தவறாமல் முன்னிலையாகி சாட்சியம் அளிக்க வேண்டும்.

4) வழக்கு விசாரணையின் முடிவில் தடயப்பொருள் சம்பந்தமாக பாதகமாக உத்தரவு வரும் நிலையில் மேற்படி தடயப்பொருளின் மதிப்பை இந்நீதிமன்றத்தில் செலுத்தவேண்டும்.

5) **ஆர்.பி.எண். 113/2026, சுமார் 26 கிராம் 470 மில்லி எடைக் கொண்ட தங்க செயின் ஒன்று** மனுதாரரான **ஜெயந்தி க/பெ. மகேஷ்** என்பவர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னார் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று **17.06.2026** இந்நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.17 17:57:16 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்.